**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 322/2024**
**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. தங்கவேல்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சந்திரன்** | **Calling** | : | **இரும்பு கம்பெனியில் வேலை** |
| **Village** | : | **கரட்டழகன்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **50** |
| | | | **Dated** | : | **25.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 5), **திரு. தங்கவேல்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து இரும்பு கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கடந்த 07.05.2025ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் திண்டுக்கல், அஞ்சலி ரவுண்டானா மேம்பாலத்தின் அருகே வந்தபோது, திண்டுக்கல், தாடிக்கொம்பு காவல்நிலை போலீசார் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். விசாரணைக்கு வந்ததற்காக பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம்

கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் ராஜா என்பவரும் கையொப்பம் செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

சண்முகம் என்பவர் எங்கள் ஊரா என்று கேட்டால் இல்லை. என்னோடு வந்த நபர் பெயர் ராஜா. அவர் எந்த ஊர் என்று கேட்டால் பூதிப்புரம். ராஜாவும், சண்முகமும் உறவினர்கள் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்தை பார்த்துவிட்டு, என்னை காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று கேட்டால், காலை 08.00 – 09.00 மணி இருக்கும். தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. இரண்டு நாட்கள் கழித்து போனேன். காவல் நிலையத்தில் வைத்து தான் நானும், ராஜாவும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், ராஜா என்னுடைய உறவினர் என்பதால் அவருககு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 25.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.11.27 18:08:20 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**